யா/ வேம்படி பெணகள் உயர்தர பாடசாலை

1ம் தவணைப் பரீட்சை – 2019

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

தரம்: 10 (2019) **நேரம் : 3 மணி**

பகுதி I

1) பண்பறி தகவல் ஒன்றின் இயல்பல்லாதது எது?

1. அழகானது 2. செம்மை 3. பொருத்தம் 4. நேரம்

2) மூளையின் தொழிற்பாட்டைப் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் பின்வருவனவற்றுள் எது?

1. Cardiac Screening Machine 2. EEG 3. CAT 4. MRI

3) பின்வரும் கணினிகளில் முதலாம் தலைமுறைக் கணினியாகக் கருதப்படக்கூடியது / கருதப்படக்கூடியவை எவை?

A. ENIAC B. IBM 7030 C. Honey well D. EDVAC E. Apple II

1. A மட்டும் 2. A,B மட்டும் 3. A,D மட்டும் 4. அனைத்தும் சரி

4) பின்வருவனவற்றில் மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்ட பிரதான தொழிநுட்பம் எது?

1. நுண்செயலி 2.திரான்சிஸ்ரர் 3. வெற்றிடக்குழாய் 4. ஒன்றிணைந்தசுற்று

5) பின்வரும் கணினிகளில் கலப்புக் கணினியாக கருதப்படுவது ..... ஆகும்.

1. வானிலை அளவுப்பொறி 2. ECG பொறி 3. கதிமானி 4. EEG பொறி

6) எப் பொறியின் மூலம் பயிரிடும் நிலத்தின் ஈரலிப்பு, செழிப்பு என்பவற்றை அளவிடலாம்?

1. வானிலை அளவுப்பொறி 2. RFID

3. நிலத்தின் நிலமையை அளவிடும் பொறி 4. தன்னியக்க களையகற்றும் பொறி

7) நெசவுப் பொறியை (Mechanical loom) வடிவமைத்தவர்.

1. Gottfried Wilhelm 2. Blaise Pascal 3. Howard Aiken 4. Joseph Jacquard

8) திரையில் தோன்றும் வெளியீடானது ..... என அழைக்கப்படும்.

1. முதல் பிரதி 2. மென் பிரதி 3. வன் பிரதி 4. மெல்லிய பிரதி

9) 1-4 வரை முகப்படையாளமிடப்பட்ட துறைகளை (ports) அடையாளம் காண்க.

kalvi.lk

1. PS/2 ports, Serial port, Audio ports, Video port
2. USB Port, Serial port, PS/2 ports, Video port
3. PS/2 ports, Parallel port, Audio ports, VGA port
4. PS/2 ports, Parallel port, Audio ports, Serial port



10) RAM ஒரு ..... நினைவகமாகும்.

1. இரண்டாந்தர 2. நிரந்தர 3. அழிதகு 4. அழிதகா

11) உள்ளீட்டு, வெளியீட்டு, சேமிப்புச் சாதனங்களின் சரியான ஒழுங்கை குறிப்பது.

	உள்ளீட்டு கருவிகள்	வெளியீட்டு கருவிகள்	சேமிப்பு கருவிகள்
1)	நெகிழ்வட்டு	அச்சுப்பொறி	வன்வட்டு
2)	வலைக்கமெரா	OCR	வருடி
3)	சுட்டி	பல்லூடக எறியி	MICR
4)	இயக்குப் பிடி	வரைவி	நினைவக அட்டை

12) பின்வரும் அச்சுப்பொறிகளைக் கருதுக:

(A) புள்ளி அமைவுரு அச்சுப்பொறி (B) வரி அச்சுப்பொறி (C) வெப்ப அச்சுப்பொறி

மேற்குறித்தவற்றில் எது/ எவை அழுத்தாத அச்சுப்பொறி/ பொறிகள் ஆகும் ?

(1) A மாத்திரம் (2) C மாத்திரம்

(3) B, C ஆகியன மாத்திரம் (4) A, B, C ஆகிய எல்லாம்

13) பின்வருவனவற்றை கருதுக.

(A) ALU (B) CU (C) RAM (D) பதிவகம் (Register)

மேலுள்ளவற்றில் எது/ எவை CPU இன் கூறுகளாகும்?

1. A மட்டும் 2. B, C மட்டும் 3. A, B, C மட்டும் 4. A, B, D மட்டும்

14) கணினிக்கு ஒலியை உள்ளீடு செய்வதற்காக பயன்படுத்தக்கூடிய துணையுறுப்பாகக் காணப்படுவது.

1. ஒலிபெருக்கி 2. பட்டைக்குறிமுறை வாசிப்பான்

3. ஒளிப்பேனா 4. நுணுக்குப்பன்னி

15) பின்வரும் சேமிப்புச் சாதனங்களில் தரவுக் கொள்ளளவு கூடியதிலிருந்து குறைந்தது வரை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது எது?

1. வன்வட்டு, பதிவேட்டு நினைவகம், காந்தநாடா, வாசிப்பு மட்டும் நினைவகம்
2. காந்தநாடா, தற்போக்குபெறுவழி நினைவகம், பதுக்கு நினைவகம், பளிச்சீட்டுசெலுத்தி
3. பதிவேட்டு நினைவகம், தற்போக்குபெறுவழி நினைவகம், வன்வட்டு, காந்தநாடா

4. காந்தநாடா, வன்வட்டு, தற்போக்குபெறுவழி நினைவகம், பதிவேட்டு நினைவகம்

16) பின்வரும் கருவிகளை கருதுக.

(A) இயக்குப்பிடி (B) OMR (C) ஒளிப்பேனா (D) அச்சுக்பொறி

சுட்டிக்காட்டும் கருவியையும் வருடும் கருவியையும் முறையே தெரிவு செய்க.

1. A,D 2. A, C 3. A, B 4. C, B

17) கணினியின் வேகம் அளக்கப்படுவது,

2. hertz 2. byte 3. seconds 4. bits

18) பின்வருவனவற்றை கருதுக.

A – காந்த நாடாவின் தரவுப் பெறுவழிக் கதியானது தற்போக்கு பெறுவழி நினைவகத்திலும் பார்க்க கூடுதலானது.

B – பதுக்கு நினைவகத்தின் தரவுப் பெறுவழிக் கதியானது தற்போக்கு பெறுவழி நினைவகத்திலும் பார்க்க கூடுதலானது

C – வன்வட்டின் தரவுப் பெறுவழிக் கதியானது பதுக்கு நினைவகத்திலும் பார்க்க கூடுதலானது.

மேற்கூறப்பட்டுள்ளவற்றில் எது/எவை சரியானது?

1. A மட்டும் 2. B மட்டும் 3. C மட்டும் 4. A, C மட்டும்

19) பின்வரும் தரவு சேமிக்கும் சாதனங்களில் திண்ம நிலை தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டது எது/ எவை?

A – நினைவக அட்டை B – நெகிழ்வட்டு

C – இறுவட்டு D – பளிச்சீட்டு செலுத்தி

1. A only 2. D only 3. B, C only 4. A, D only

20) **HDMI** என்பதன் விரிவாக்கம்.

1. High Define Multimedia Interface
2. High Definition Multi Interface
3. High Definition Multimedia Interface
4. High Diode Multi Interface

21) இப்படம் குறிப்பது,

1. QR code 3. OCR
2. Barcode 4. MICR

22) …… உலோகமாக இருக்கும் அதேவேளை இதன் இரு பக்கங்களிலும் தரவுகளைத் தேக்கி வைப்பதற்கான ஆற்றல் உண்டு. இது அழைக்கப்படுவது,

1. நினைவகத்தட்டு 2. தலை 3. தூண்டி 4. சுழல்தண்டு

23) ஒரே தடவையில் இரு திசைகளிலும் தரவுகள் ஊடுகடத்தப்படுவது,

1. ஒற்றைமுறை 3. முழு இருவழி முறை

2. அரை இருவழி முறை 4. தொடர் முறை

24) வழிப்படுத்தப்பட்ட ஊடகமானது ஒரு சாதனத்திலிருந்து இன்னொரு சாதனத்திற்கு ஒருவழியை வழங்குகின்றது. இது உள்ளடங்குவது,

1. முறுக்கிய கம்பிச்சோடி 3. ஓரச்சுவடம்

2. ஒளியியல் நார்கள் 4. மேற்கூறியவை அனைத்தும்

25) கணினி வலையமைப்பு என்பது,

1. கணினியினதும் வன்பொருள் பாகங்களினதும் சேர்ப்பாகும்.
2. தொடர்பாடல் ஊடகங்களால் ஒன்றிணைக்கப்பட்டதாகும்.
3. வளங்களையும் தகவலையும் பகிர்வது.
4. மேற்கூறியவை அனைத்தும்

26) இப்படம் கணினி வலையமைப்பின் எந்த இடத்தியலை குறிக்கின்றது?

1. வளையம்
2. உடு
3. பாட்டை
4. மரம்



27) தொலைக்காட்சியின் சேய்மைக் கட்டுப்படுத்திகளில் எவ் வழிப்படுத்தப்படாத ஊடகம் பயன்படுத்தப்படுகின்றது?

1. புளூரூத் 2. செங்கீழ்க்கதிர் 3. நுண்ணலைகள் 4. வை-பை

28) ஒரு கணினி மற்றும் ஒரு விசைப்பலகையிடையேயான தொடர்பு ..... ஊடுகடத்தும் முறையாகும்.

1. அரைஇருவழி 2. முழுஇருவழி 3. ஒற்றைமுறை 4. எவையுமில்லை

29) கணினி வலையமைப்பில் தீச்சுவர் தொடர்பான சரியான கூற்றுக்கள் எவை?

A. கணினி வலையமைப்பை பாதுகாக்கும் தொகுதியாகும்.

B. கணினி வலையமைப்பின் பணிச்செயல் முறைமையாகும்.

C. இது மென்பொருளாகவோ வன்பொருளாகவோ காணப்படலாம்.

D. இணைய உலாவி மென்பொருளாகும்.

1. A, D 2. A, B 3. A,B,C 4. மேற்கூறியவை அனைத்தும்

30) 256 க்கு சமனானது.

1. 1001110_2 2. 234_8 3. $9D_{16}$ 4. 2, 3 சரியானவை

31) 0.0947_{10} எனும் இலக்கத்தின் MSD, LSD முறையே,

1. 9,7 2. 0,7 3. 0,0 4. 7,0

Education கல்வி அமைச்சு

32) EBCDIC குறிமுறையில் எழுத்துக்களை வகைகுறிக்க பயன்படுத்தப்படும் bits களின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 16 4. 8 4. 4

33) எண்சட்டத்தில் காண்பிக்கப்படுகின்ற பெறுமானம் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1. 349_{10}
2. 4411_8
3. 101011101_2
4. $15D_{16}$



34) பின்வருவனவற்றுள் மிகக் குறைந்த பெறுமதியுடையது எது?

1. 53_{16} 2. 48_{10} 3. 101100_2 4. 55_8

35) 8MB க்கு சமனானது,

1. 128 bytes 2. 4096 bits 3. 2^{13} GB 5. 2^{13} KB

36) ASCII குறிமுறையில் 1000101 என்ற வடிவில 'E' என்ற எழுத்து பிரதிநிதித்துவம் செய்யப்பட்டால் 'M' என்ற எழுத்து பிரதிநிதித்துவப்படுத்தும் வடிவம் யாது?

1. 1001110_2 2. 1001101_2 3. 1001100_2 4. 10010101_2

37) இரும குறிமுறை பதின்மம் (BCD) இல் 4 பிற்றுக்களால் ஒர் பதின்ம எண் வகை குறிக்கப்படும். பின்வருவனவற்றில் மிகக் குறைந்த பெறுமதியுடைய BCD இலக்கம் யாது?

1. 00100010 2. 10001000 3. 01001000 4. 11001001

38) ஒரு கணினியிலிருந்து இன்னொன்றுக்கு கோப்புகளை நகலெடுக்கப் பயன்படும் சிறிய சேமிப்புச் சாதனம் எது?

1. பளிச்சீட்டு செலுத்தி 2. நெகிழ்வட்டு 3. வன்வட்டு 4. இறுவட்டு

39) பின்வருவனவற்றுள் Blue-Ray வட்டின் கொள்ளளவாக அமையக்கூடியது எது?

1. 25GB – 128GB 2. 650MB – 900MB 3. 4.7GB – 9.4GB 4. 250GB – 4TB

40) கணினியின் இயல்பொன்றாக அமையாதது எது?

1. செம்மை 3. பல்திறமை
2. சிந்திக்கும் ஆற்றல் 4. சேமித்தலும் மீட்டெடுத்தலும்

Education கலை அலையாக